இலங்கை உயிரியல் ஒலிம்பியட் மாதிரி வினாக்கள் – 2009

அறிவுறுத்தல்கள்:

வினாத்தாள் அ, ஆ எனும் 2 பகுதிகளை கொண்டது.

பகுதி அ 40 பல்தேர்வு வினாக்களைக் (MCQ) கொண்டது. ஒவ்வொரு வினாவுக்கும் 1 புள்ளி வீதம் மொத்தம் 40 புள்ளிகள்.

பகுதி ஆ 20 குறுகிய விடை வினாக்களை (Short Answer Question) கொண்டது. ஒவ்வொரு வினாக்களுக்குமான புள்ளிகள் அவ்வினாக்களிலே தரப்பட்டுள்ளது. மொத்தம் 60 புள்ளிகள்.

இந்த மாதிரி வினாத்தாளில் மூன்று பல்தேர்வு வினாக்களும் மூன்று குறுகிய விடை வினாக்களும் தரப்பட்டிருக்கின்றது.

பகுதி அ - பல்தேர்வு வினாக்கள்

வினா 1 உம் 2 உம் கீழ்வரும் ஓமோன்களை அடிப்படையாக கொண்டவை.

A. GnRH B. hCG C. புரோஜெஸ்ரோன் D. ஈஸ்ரோஜென் E. LH

1. கற்பத்தை (Pregnancy) பராமரிப்பதற்கு மேற்குறிப்பட்ட எந்தெந்த ஓமோன்கள் முக்கியமானவை?

   (1) A உம் E உம்

   (2) D உம் E உம்

   (3) A உம் B உம்

   (4) A உம் D உம்

   (5) B உம் C உம்

2. குருதியில் ஒரு ஓமோனின் அளவு அதிகரிப்பதன் விளைவானது இன்னொன்றின் அளவில் குறைவை ஏற்படுத்துகிறது. அவையிரண்டுமாவன,

   (1) C உம் A உம்

   (2) B உம் C உம்

   (3) A உம் E உம்

   (4) C உம் D உம்

   (5) E உம் C உம்

3. மனிதனின் மூளைக்கலங்களில் உருவாக்கப்படும் CO_2 மூலக்கூறு சுவாசப்பையை அடையும் பாதை,

(1) தலை நாளம் - நிருநாம நாளம் - மேற்பெரு நாளம் - இதயம் - சுவாசப்பை நாடி – சுவாசப்பை

(2) சிரசு நாளம் - நிருநாம நாளம் - மேற்பெரு நாளம் - இதயம் - சுவாசப்பை நாடி - சுவாசப்பை

(3) உட்கழுத்து நாளம் - நிருநாம நாளம் - மேற்பெரு நாளம் - இதயம் - சுவாசப்பை நாடி - சுவாசப்பை

(4) உட் தலை நாளம் - பொதுத்தலை நாளம் - நிருநாம நாளம் - மேற்பெரு நாளம் - இதயம் - சுவாசப்பை நாடி - சுவாசப்பை

(5) உட்கழுத்து நாளம் - நிருநாம நாளம் - மேற்பெரு நாளம் - இதயம் - சுவாசப்பை நாடி - சுவாசப்பை

பகுதி ஆ – குறுகிய விடை வினாக்கள்

1. **(5 புள்ளிகள்)** கலம் எவ்வாறு கிளைக்கோ புரதத்தை உற்பத்தி செய்து அதனை கலத்திற்கு வெளியே சுரக்கிறது என்பதை காட்டும் படிகள் கீழே தரப்பட்டுள்ளது.



இடப்பக்கத்தில் காட்டப்பட்டுள்ளவாறு படத்தில் காட்டப்பட்ட A, B, C, D. E எழுத்துக்களை வலப்பக்கத்திலுள்ள பொருத்தமான பதங்களுடன் இணைக்குக.

A	காபோவைதரேற்று
	சுரக்கும் புடகம்
B	கடத்தும் RNA
	செய்தி காவும் RNA
C	பல்பெப்ரைட்டு
	புறக்குழியமாதல்
D	DNA
	கடத்தும் புடகம்
E	இலிப்பிட்டுக்கள்

2. **(5 புள்ளிகள்)** பொருத்தமான பெட்டிகளினுள் " √ " அடையாளத்தை இடுவதன் மூலம் கீழ்க்குறிப்பிட்டுள்ளவை குருதி அமுக்கத்தை அதிகரிக்குமா / குறைக்குமா என சுட்டிக்காட்டுக.

	விளைவு	**அதிகரிக்கும்**	**குறைக்கும்**
a.	அதிரீனலின்		
b.	பரபரிவு நரம்புத் தொகுதி		
c.	நிக்கொட்டின்		
d.	நாளங்களில் உயர் CO_2 செறிவு		
e.	நாடிகளில் உயர் pH		

3. **(6 புள்ளிகள்)** கீழே தரப்பட்டுள்ள அட்டவனையானது சில விற்றமின்களையும் விற்றமின் குறைபாட்டின் சில நோய்க்குறிகளையும் தருகின்றது. சரியாக பொருந்துவதை சுட்டிக்காட்ட அட்டவணையில் பொருத்தமான கூட்டினுள் " √ "அடையாளமிடுக.

குறைபாட்டு நோய்	Vit.A	Vit.C	Vit.D	Vit.B1	Vit.B5	Vit.B6
தோல் உலர்தல்						
குருதிச்சோகை						
தசைப்பிடிப்பு						

மாதிரி வினாக்களுக்கான விடைகள்

பகுதி அ

1 – 5

2 – 1

3 – 3

பகுதி ஆ

1.



2.

	விளைவு	**அதிகரிக்கும்**	**குறைக்கும்**
a.	அதிரீனலின்	√	
b.	பரபரிவு நரம்புத் தொகுதி		√
c.	நிக்கொட்டின்	√	
d.	நாளங்களில் உயர் CO_2 செறிவு	√	
e.	நாடிகளில் உயர் pH		√

3.

குறைபாட்டு நோய்	Vit.A	Vit.C	Vit.D	Vit.B1	Vit.B5	Vit.B6
தோல் உலர்தல்	√					√
குருதிச்சோகை		√				√
தசைப்பிடிப்பு				√	√	